بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - துல்கஅதஃ 11 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - இஹ்ஸான் 01 ★ 01 ஜூன் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَاعۡلَمُوۡۤا اَنَّمَاۤ اَمۡوَالُکُمۡ وَاَوۡلَادُکُمۡ فِتۡنَۃٌ ۙ وَّاَنَّ اللّٰہَ عِنۡدَہٗۤ اَجۡرٌ عَظِیۡمٌ

**பொருள் :**

உங்கள் செல்வங்களும் உங்கள் சந்ததிகளும் சோதனையாகும். அல்லாஹ்-அவனிடமே மாபெரும் கூலியுண்டு.

(அல்அன்ஃபால் :29)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## (உங்களிடம்) கருத்துவேறுபாடு நிலவி ஒற்றுமை இல்லாவிட்டால் பின்னர் (நீங்கள்) நற்பேறு அற்றவர்களாக ஆகிவிடுவீர்கள்

### முதலில் இறைவனின் ஏகத்துவத்தை மேற்கொள்ளுங்கள். இரண்டாவதாக உங்களுக்குள் பரஸ்பர அன்பையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்துங்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நீங்கள் உங்களுக்குள் ஒற்றுமையாக இருங்கள். ஒன்றுபட்டு செயல்படுங்கள் என்று முன்பு நான் பலமுறை ஜமாஅத்தின் பரஸ்பர ஒற்றுமை மற்றும் நேசத்தைக் குறித்து கூறியிருக்கின்றேன். நீங்கள் ஒரே இருப்பாக திகழுங்கள். இல்லையென்றால் வீணாகிவிடுவீர்கள் என்ற போதனையையே இறைவன் முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளான். உங்களுக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதற்காகவே தொழுகையில் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து நிற்கும்படி கட்டளை உள்ளது. மின்சார ஆற்றலைப் போன்று ஒருவரின் நன்மை மற்றவரிடம் ஊடுருவிச் செல்லும். (உங்களிடம்) கருத்துவேறுபாடு நிலவி ஒற்றுமை இல்லாவிட்டால் பின்னர் (நீங்கள்) நற்பேறு அற்றவர்களாக ஆகிவிடுவீர்கள். நீங்கள் பரஸ்பரம் அன்பு செலுத்துங்கள். மேலும் ஒருவர் மற்றவருக்காக மறைவாக துஆ செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு நபர் (அவ்வாறு) மறைவான துஆ செய்தால் பின்னர் உமக்காகவும் அவ்வாறே ஆகட்டும் என்று வானவர்கள் கூறுவர். எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட விஷயம் இது! மனிதனின் துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லையென்றாலும் வானவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டுவிடுமே! நான் உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன்.மேலும் நீங்கள் உங்களுக்குள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என்றும் நான் கூற விரும்புகின்றேன்.

நான் இரண்டு விவகாரங்களையே எடுத்துக் கொண்டு வந்துள்ளேன். முதலாவதாக, நீங்கள் இறைவனின் ஏகதத்துவத்தை மேற்கொள்ளுங்கள். இரண்டாவதாக, உங்களுக்குள் பரஸ்பரம் அன்பைும், அனுதாபத்தையும் வெளிப்படுத்துங்கள். அந்நியர்களுக்கு அற்புதமாக திகழும் அந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்துங்கள். இந்த சான்றுகளே ஸஹாபிகளிடம் உருவாகியிருந்தன.

كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ

(ஆலிஇம்ரான்: 104) நினைவிற் கொள்ளுங்கள்!

நட்பு ஓர் அற்புதம் ஆகும். நினைவிற் கொள்ளுங்கள்! தனக்காக விரும்புகின்றவற்றையே தனது சகோதரருக்காகவும் விரும்புகின்றவராக ஒருவர் திகழாத வரை அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருக்க மாட்டார். அவர் துன்பத்திலும், வேதனையிலும் இருக்கின்றார். அவருக்கு நல்ல முடிவு ஏற்படாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 457, காதியான் பதிப்பு -2003)

## ஒவ்வொரு நபருடைய செல்வத்திலும் அவரது உறவினர்கள், ஏழைகள் மற்றும் பயணிகளுக்கு உரிமை உள்ளது. ஒருவருடைய செல்வம் அவருக்கு மட்டுமே உரியது கிடையாது. இன்னும் கூறப்போனால் அதில் மற்றவர்களுக்கான உரிமையும் அடங்கியுள்ளது

وَاٰتِ ذَا الۡقُرۡبٰی حَقَّہٗ وَالۡمِسۡکِیۡنَ وَابۡنَ السَّبِیۡلِ وَلَا تُبَذِّرۡ تَبۡذِیۡرًا ﴿۲۷﴾ (17:27)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு நபருடைய செல்வத்திலும் அவரது உறவினர்கள், ஏழைகள் மற்றும் வழிப்போக்கர்களுக்கு உரிமை உள்ளது. உறவினர்கள் மனிதனின் வருமானத்தில் பல வகையில் உதவிக்கான காரணியாக இருக்கின்றனர். எனவே அவரது செல்வத்தில் அவர்கள் அனைவருக்கும் உரிமை இருக்கின்றது. உதாரணமாக, பெற்றோர் தமது ஒரு மகனை படிக்க வைக்கின்றனர். மேலும் அவர் ஓர் உயர் பதவியை அடைந்துவிடுகின்றார். மற்ற சகோதரர்கள் கல்வியிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருந்துவிட்டால் பின்னர் அந்த உயர் பதவியை அடைந்தவரின் செல்வத்தில் மற்ற சகோதரர்களுக்கும் உரிமை இருக்கின்றது. ஏனெனில், எந்த பணத்தின் மூலம் அவருக்கு கல்வி வழங்கப்பட்டிருந்ததோ அதில் அவர்கள் அனைவருக்கும் உரிமை இருந்தது.

ஏழைகள் மற்றும் வழிப்போக்கர்களுக்கும் அல்லாஹ் உரிமை இருப்பதாக ஆக்கியிருக்கின்றான். மேலும் மற்றோரிடத்தில் விளக்கமாக கூறியும் விட்டான். وَفِیۡۤ اَمۡوَالِہِمۡ حَقٌّ لِّلسَّآئِلِ وَالۡمَحۡرُوۡمِ ﴿۲۰﴾

(அஸ்ஸாரியாத் : வசனம்-20) பொருள்: மனிதனின் செல்வத்தில் யாசிப்பவர்களுக்கும் உரிமை உள்ளது.

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

## நபிமொழி

**ஒருவர் எந்த அளவிற்கு செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் அதே அளவிற்கு தேவையுடையவராக இருக்கின்றார். எவர் இன்ன இன்ன வகையில் செலவு செய்கின்றாரோ அவரைத் தவிர!**

(2388) ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அன்னார் (ஸல்) உஹது மலையைக் கண்டபோது, இது (முழுவதும்) எனக்காக தங்கம் ஆக்கப்பட்டுவிட்டாலும் கூட மூன்று நாட்களுக்கு மேல் அவற்றிலிருந்து ஒரு தினார் என்னிடம் எஞ்சியிருப்பதைக் கூட நான் விரும்பமாட்டேன். கடனை திருப்பி செலுத்துவதற்காக வைத்திருக்கும் தினாரைத் தவிர. பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒருவர் எந்த அளவிற்கு செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் அதே அளவிற்கு தேவையுடையவராக இருக்கின்றார். எவர் இன்ன இன்ன வகையில் செலவு செய்கின்றாரோ அவரைத் தவிர!

إِنَّ الْأَكْثَرِينَ هُمُ الْأَقَلُّونَ

ஹஸ்ரத் ஸய்யது ஜைனுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இந்த வாக்கியத்தின் பொருள் என்னவென்றால், பணத்தை ஒன்று கூட்டுவதில் செல்வச் செழிப்பு இல்லை. இன்னும் கூறப்போனால், பெரும்பாலான செல்வந்தர்கள் நல்லொழுக்கத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருப்பதன் காரணத்தால் வறியவர்களாக இருக்கின்றனர். செல்வச் செழிப்பு என்பது செல்வத்தை ஒன்று கூட்டுவதில் இல்லை. மாறாக, வலமும், இடமும் செலவு செய்வதில் உள்ளது. அதாவது, மார்க்க மற்றும் உலகத் தேவைகளுக்காக செலவு செய்வதன் மூலமாக செல்வத்தின் நோக்கம் முழுமையடைகின்றது. எவர் ஒருவர் பணத்தை ஒன்றுகூட்டி பின்னர் அதனை கடமைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்யவில்லையோ அவரே மிகப் பெரும் ஏழை ஆவார். ஆனால், எந்த நபர் தனது செல்வத்தின் மூலமாக கடமைகளை நிறைவேற்றினாரோ அவரே உண்மையில் தேவையற்றவர் ஆவார். அதாவது அவர் செல்வத்தின் அசல் நோக்கத்தை அடைந்து விட்டார். செல்வத்தைக் குறித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தப் பார்வை மிகவும் உயர்வான ஞானம் நிறைந்த பார்வையாகும்.

(ஸஹீஹ் அல்புகாரி, தொகுதி 4, 2008 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் இறையச்சத்தின் விளக்கமும் அதனை பெறுவதற்கான அறிவுரையும்**

**அசல் விஷயம் இறையச்சம் ஆகும். அசல் விஷயம் நிரந்த தன்மையுடன் இறைவனின் கட்டளைகளின்படி அமல் செய்வது ஆகும். அசல் விஷயம் இறைவன் மீதான அச்சம் மற்றும் அவனது திருப்தியைப் பெறுவதாகும்**

**நாம் சுயமே நம் வாழ்வை இறையச்சத்தின் படி செயல்படுவதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் கழிக்கும்போது நாம் நம்முடைய பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் முன்னும் எப்படிப்பட்ட முன்மாதிரியை முன் வைப்போம் என்றால், அதன் மூலம் நன்மைகள் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு கிடைத்துக் கொண்டே செல்லும்**

**ஒவ்வொரு கஷ்டத்தில் இருந்தும் ஒவ்வொரு சிரமம் மற்றும் இன்னலில் இருந்தும், தப்புவதற்கான இந்த யுக்தியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறியுள்ளார்கள்:**

**என்னுடைய போதனைகளின்படி களங்கமற்றவர்களாக ஆகி அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருவதற்கு முயற்சி செய்யுங்கள். பின்னர், அல்லாஹ் உங்களை எவ்வாறு ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுகின்றான் என்று பாருங்கள்!**

**துஆவில் ஓர் ஈர்ப்பு சக்தி இருக்கின்றது. அது அருளையும், கருணையையும் தன்பால் ஈர்க்கின்றது.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஏப்ரல் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **21ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். ரமலான் கடந்துவிட்டது. பல மக்கள் ரமலானில் இபாதத் செய்வதற்கும், தம்முள் சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் திட்டம் வகுத்து வைத்து இருந்திருப்பார்கள். ஆனால், நினைத்த அளவுக்கு அவர்களால் அதன்படி அமல் செய்ய முடியவில்லை. இவ்வாறு பல மக்கள் எனக்கு கடிதம் எழுதுகிறார்கள். இன்று ரமலானின் கடைசி நாளும் சில மணி நேரத்தில் முடிவடையவிருக்கின்றது.

ஜுமுஆ நாள் எத்தகைய அருளுக்குரிய நாள் என்றால், அதில் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான நேரம் இருக்கக் கூடிய ஒரு தருணம் வருகிறது. (ஸஹீஹ் புகாரி, கிதாப் ஜுமுஆ, ஹதீஸ் எண் 935)

எனவே நமது ரமலானின் நாட்களும் நாம் ஆசை கொண்டிருந்தது போன்று கழியவில்லை அல்லது ஒரு நம்பிக்கையாளரின் ரமலான் எவ்வாறு கழிய வேண்டுமோ அவ்வாறு கழியவில்லை என்றாலும் கூட, இன்று எஞ்சிய இந்த நேரத்தில் நாம் இவ்வாறு உறுதி மொழி எடுக்க வேண்டும். மேலும், அல்லாஹ் நம்முடைய பலவீனங்களை கண்டும் காணாதவாறு நம் மீது கருணை புரிந்தவாறு அல்லாஹ் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த வழியில் நாம் நம் வாழ்வை செலுத்தக்கூடியவர்களாக ஆகுவதற்கான நற்பேறை நமக்கு வழங்கிட வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ்வோ மிகவும் கருணையாளன் ஆவான். அவன் நம்முடைய துஆக்களை ஏற்றுக் கொள்வதற்கு ரமலான் மாதத்தில் ஜுமுஆ நாளில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒருநேரம் வருகிறது என்று கூறவில்லை. மாறாக, ஜுமுஆ நாளின் பொது சிறப்பாக இதைக் கூறியுள்ளான்.

எனவே, இன்று நாம் நம்முடைய துஆக்களில், இந்த ரமலானுக்குப் பிறகும் எங்களது இறையச்சத்தின் தரத்தை நாங்கள் அதிகரித்துக் கொண்டே இருப்போம்; அதற்காக முயற்சி செய்வோம்; நாங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்போம்; (ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு) அடுத்த ஜுமுஆ வரை எங்களுடைய இறைவணக்கங்களை அல்லாஹ்விற்காக மட்டுமே மேற்கொண்டு வருவோம்; பின்னர் ஒவ்வொரு ஜுமுஆவின் இடைப்பட்ட காலத்தை எங்களது இறைவணக்கங்கள் மற்றும் நற்செயல்களால் அலங்கரிப்பதற்கு முயற்சி செய்வோம்; உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கு முயற்சி செய்வோம்; நாங்கள் எங்களிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக ரமலான் மாதத்திற்காக உருவாக்கியிருந்த ; ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் அதன்படி செயல்பட முடியாமல் போன அந்த நிகழ்ச்சியை அடுத்த ரமலான் வரை நிறைவு செய்வதற்கு முயற்சி செய்து கொண்டே இருப்போம் என்று நாம் உறுதிமொழி எடுத்துக் கொண்டால் பின்னர் இந்த அமல் தான் உண்மையான இறையச்சத்தை உருவாக்கக்கூடியதாகும்.

நாம் கலப்பற்றவர்களாக நம்முடைய இபாதத்கள் மற்றும் நம்முடைய நற்செயல்களை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நிறைவேற்றுபவர்களாக இருப்போம் என்றால் பின்னர், கருணையாளர்களில் எல்லாம் பெரிய கருணையாளன் ஆன, ரஹ்மான் ஆன, ரஹீம் ஆன அல்லாஹ் நமக்கு எவற்றின்படி நாம் இந்த ரமலானிலும் ஓரளவு அமல் செய்தோமோ அதன் அருட்களை வழங்கிக் கொண்டே இருப்பான்.

ஆக, அசல் விஷயம் இறையச்சம் ஆகும். அசல் விஷயம் நிரந்த தன்மையுடன் இறைவனின் கட்டளைகளின்படி அமல் செய்வது ஆகும். அசல் விஷயம் இறைவன் மீதான அச்சம் மற்றும் அவனது திருப்தியைப் பெறுவதாகும். இது இருக்கின்றது என்றால், மேலும், நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை இருப்பதை மறந்துவிடக் கூடிய அந்த உலகவாதத்திற்கு நாம் திரும்பிச் சென்று விடவில்லை என்றால், பின்னர் நம்முடைய இறை

வணக்கங்கள் மற்றும் நமது சீர்திருத்தத்திற்கான முயற்சியை நாம் எந்த அளவு மற்றும் எப்படி இந்த ரமலானில் செய்தோமோ அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொண்டவாறு நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பான்.

எனவே, இது அடிப்படைக் கருத்தாகும். இதை நாம் எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தைப் பெறுவதை ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் தன் கருத்தில் கொள்ள வேண்டும். நாம் சுயமே நம் வாழ்வை இறையச்சத்தின் படி செயல்படுவதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் கழிக்கும்போது நாம் நம்முடைய பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் முன்னும் எப்படிப்பட்ட முன்மாதிரியை முன் வைப்போம் என்றால், அதன் மூலம் நன்மைகள் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு கிடைத்துக் கொண்டே செல்லும்.

அல்லாஹ்வின் அருளால் நாம் காலத்தின் இமாமிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரிடம் பைஅத் செய்துள்ளோம். எந்த நிபந்தனைகளின் பேரில் பைஅத் செய்துள்ளோமோ அவற்றின் சுருக்கம் என்பதே எப்போதும் இறையச்சம் கருத்தில் கொள்ளப்படும் என்பதுதான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மீண்டும், மீண்டும் இதை வலியுறுத்தியுள்ளார்கள். இதன் மூலம் நம் வாழ்வில் எத்தகைய புரட்சி ஏற்பட்டு விட வேண்டும் என்றால், அது ஒவ்வோர் ஆண்டும் ஒரு மாதத்திற்கான புரட்சியாக மட்டும் இருக்கக் கூடாது அல்லது வருடத்தில் ஒரு மாதம் மட்டும் அந்தப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடாது.

ரமலான் மாதத்தில் இறையச்சத்திற்கான படித்தரங்களைப் பெறுவதற்காக அல்லாஹ் ஒரு தர்பிய்யத் சூழல் மற்றும் ஓர் ஏற்பாட்டை நமக்காகவே செய்திருக்கின்றான். எனினும் அது, நாம் ஒவ்வொரும் ரமலானுக்குப் பிறகும் இறையச்சத்தின் அடுத்த மற்றும் உயர்ந்த தரங்களைப் பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும் என்பதற்காகத்தானே அன்றி, அதற்கு மாற்றமாக ரமலானுக்குப் பிறகு நாம் மீண்டும் நமது தரத்தைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல.

ஆக, நான் கூறியதுபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறையச்சத்தின் தரத்தை உயரச் செய்வதற்காகவும் நம்முடைய சீர்திருத்தத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளார்கள். அன்னார் (அலை) இதை மீண்டும், மீண்டும் நமக்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

ஆக, ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: உண்மை மற்றும் ஈமானின் காலம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காகவும், உள்ளங்களில் இறையச்சம் உருவாக வேண்டும் என்பதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஆகவே, இந்த செயல்கள் தான் எனது தோற்றத்தின் அசல் நோக்கம் ஆகும். இதுவே எனது வருகைக்கான குறிக்கோள் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

வானம், பூமியை விட்டு வெகு தொலைவில் சென்ற பிறகு மீண்டும் அருகில் வந்துவிடும் என்று எனக்குக் கூறப்பட்டுள்ளது. (கிதாபுல் பரிய்யா ரூஹானி கஸாயின், தொகுதி 13, பக்கம் 293-294)

ஆக, இந்த விஷயங்களையே நாம் எப்போதும் நம் முன் வைக்க வேண்டும். அன்னாரது காலகட்டமானது நபித்துவ வழியிலான கிலாஃபத் மீது நிலைநின்றவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் படி கியாமத் வரை இருக்கக் கூடிய காலமாகும். அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களே உண்மையில் நிலைநின்றவாறு தமது ஈமானைப் பாதுகாக்க வேண்டும். மேலும், அதன் உயர்தரத்தைப் பெற வேண்டும்.

இது வெறும் ஒரு மாதத்தின் நன்மைகள் அல்லது நன்மைகள் செய்வதற்கான ஆசைகள் கொண்டிருத்தல் அல்லது ஒரு மாதத்தின் இறை வணக்கங்கள் செய்தல் மற்றும் இறைவணக்கங்களில் சிறப்பான ஈடுபாடு காட்டுதல் அல்லது குறிப்பாக ஒரு மாதத்திற்கு மட்டும் பள்ளிவாசல்களை நிரப்புதல் ஆகியவற்றால் மட்டும் கிடைக்காது. மாறாக, உண்மையை ஏற்றோம் எனும்போது, மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகவும் ஏற்றுக் கொண்டு பைஅத் செய்துள்ளோம் எனும்போது பின்னர் ஈமானின் தரத்தை உயரச் செய்வதற்கு நாம் சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும்.

நாம் இவ்வாறு ஆகிவிடும்போது பின்னர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் சிறப்பான தொடர்பு உள்ள அந்த மக்களைச் சேர்ந்தவர்களாக நாம் ஆகி விடுவோம். அவர்கள் பைஅத்தின் நோக்கத்தைப் புரிந்திருந்தார்கள். மேலும் அதற்கான உரிமையை செலுத்த முயற்சி செய்தனர். இத்தகைய மக்களைப் பற்றி தான் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நான் உன்னுடனும், உன்னுடைய அன்பர்களுடனும் இருக்கின்றேன் என்று கூறினான். ஒருவருடைய கூற்றுகளுக்கு ஏற்ப அமல் செய்வதும் அவருடைய விருப்பங்களுக்கு ஏற்ப தம் வாழ்வைக் கழிப்பதுமே ஒருவரின் அன்பராக இருப்பதற்கான அடிப்படை நிபந்தனையாகும்; இருக்கவும் வேண்டும்.

ஆக, இங்கு அல்லாஹ் சுயமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பர்களுடன் இருப்பதற்கான அறிவிப்பை செய்து விட்டான். ஆக, அல்லாஹ் ஒருவருடன் இருந்துவிடும்போது பிறகு, அவருக்கு வேறு ஒரு பொருளின் தேவை என்ன இருக்கிறது? ஆக, தமது ஈமானின் இந்தத் தரத்தைப் பெற்றவர்களே நம்மில் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள். அங்கு நிரந்தரமாக அவர்களுடன் அல்லாஹ் இருந்து விடுகிறான். எவருடன் அல்லாஹ் இருந்து விடுகிறானோ அவருடைய உலகமும் மறுமையுமே சீர்பட்டு விடும்.

எனவே நாம் நம்முள் இறையச்சத்தை உருவாக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். மேலும், நாம் நிரந்தர மனப்பான்மையுடன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்யும் போதுதான் இது நிகழும்.

அன்னார் (அலை) அந்த மேற்கோளில் இதையும் கூறினார்கள்:

மீண்டும் வானம் பூமிக்கு அருகில் வந்துவிடும்.

திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு விளக்கமாகக் கூறிய அந்த வழியில் செல்லக்கூடியவர்களாக நாம் ஆகும்போது தான், வானம் பூமிக்கு அருகில் வரும். அப்போதுதான் அவனது அருட்கள் நம்மை வந்தடையும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் அருட்கள் எனும் மழை பொழியக்கூடிய, அவர்களின் துஆக்களை அல்லாஹ் கேட்கக் கூடிய அந்த நற்பாக்கியம் பெற்ற மக்களில் இணைய முடியும்.

நாம் நம்முடைய வாழ்வில் இந்தக் காட்சியைக் காணும்போதுதான் வாருங்கள்! நீங்கள் இறைவனுடன் உண்மையான தொடர்பை உருவாக்க விரும்பினால் உங்களது ஈமானை உறுதிப்படுத்த விரும்பினால் பின்னர் ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை

அடியாரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற விஷயத்தின் பால் நாம் நம்பிக்கையுடன் மற்றவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். மேலும், இது இறையச்சத்தின் தரத்தைப் பெறுவதனால் மட்டுமே நிகழும்.

மேலும், நாம் இந்தத் தரத்தைப் பெற்றதன் பின்னர் அதன் மீது நிரந்தரமாக நிலைநிற்கும்போது தான் இது நடைபெறும். பின்னர் நாம் அல்லாஹ்வின் அருட்களின் காட்சிகளையும் காண்போம்.

ஆக, நம்மில் இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டவர்கள், மேலும் வாழ்வை உண்மை மற்றும் இறையச்சத்தின் தரம் வரை கொண்டு செல்லக்கூடியவர்களாக ஆகிவிட்டவர்கள் அல்லது ஆவதற்கு முயற்சி செய்பவர்கள் ஆகிய அவர்கள் தான் அல்லாஹ்வின் அருட்களின் காட்சிகளைக் காண்பார்கள்.

நாம் நம் வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைகளின்படி இறையச்சத்தின் வழிகளில் செல்லக் கூடியதாக ஆக்கிக் கொண்டால் நம்மில் ஒவ்வொருவராலும் இந்தக் காட்சியைக் காணமுடியும். உண்மையான இறையச்சம் எது? அதன்படி நடக்கக்கூடியவர் எப்படி இருக்க வேண்டும்? அல்லாஹ் அவருடன் எப்படி நடந்து கொள்கிறான்? ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையான இறையச்சத்துடன் அறிவீனம் ஒன்றிணைய முடியாது.

ஆக, இறையச்சமுடையவர் முட்டாளாக இருக்க முடியாது என்பது அடிப்படையான விஷயம் ஆகும். உண்மையான இறையச்சமுடையவர் இறைவணக்கங்கள் செய்யக்கூடியவராக இருப்பார். அத்துடன் அடியார்களுக்கான உரிமையையும் செலுத்தக்கூடியவராக இருப்பார். ஆக, இந்த அடிப்படை விஷயத்தைத்தான் நாம் எப்போதும் நம் முன் வைக்க வேண்டும்.

பிறகு, கூறினார்கள்: உண்மையான இறையச்சம் தன்னுடன் ஓர் ஒளியைக் கொண்டிருக்கும். இது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّ يُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ (8:30)

وَيَجْعَلْ لَّكُمْ نُوْرًا تَمْشُوْنَ بِهٖ (57:29)

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறையச்சமுடையவர்களாக இருப்பதில் நிலைத்து நின்றால், அல்லாஹ்வுக்காக இறையச்சத்தின் பண்பில் நிலைநின்று மேலும் உறுதிப்பாட்டை மேற்கொண்டால் அல்லாஹ் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்படுத்தி விடுவான்.

இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கவுரையாக மொழியாக்கம் செய்கின்றார்கள்.

அல்லாஹ்விற்காக இறையச்சத்தின் பண்பில் நிலைநின்று மேலும் உறுதிப்பாட்டை மேற்கொண்டால் அல்லாஹ் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுவான். அந்த வித்தியாசம் என்னவென்றால், உங்களுக்கு ஓர் ஒளி வழங்கப்படும். அந்த ஒளியுடன் நீங்கள் உங்களது அனைத்து வழிகளிலும் செல்வீர்கள். அதாவது, அந்த ஒளி உங்களது செயல்கள், சொற்கள், ஆற்றல்கள் மற்றும் புலன்கள் ஆகியவற்றில் வந்து விடும்.

உங்களது அறிவிலும் ஒளி இருக்கும். உங்களது ஊகத்திலும் ஓர் ஒளி இருக்கும். உங்களுடைய கண்களிலும் ஒளி இருக்கும். உங்களுடைய காதுகள், உங்களுடைய நாவுகள், உங்களுடைய கூற்றுகள், உங்களுடைய அசைவுகள் மற்றும் அசைவின்மையிலும் ஒளி இருக்கும். நீங்கள் எந்தப் பாதைகளில் செல்வீர்களோ அவை ஒளி பெற்று விடும். ஆக, உங்களுடைய வழிகள் எவ்வளவு உள்ளனவோ உங்களுடைய புலன்களின் வழிகள் எவ்வளவு உள்ளனவோ அவை அனைத்தும் ஒளியால் நிரம்பிவிடும். மேலும், நீங்கள் தலை முதல் கால் வரை ஒளியிலேயே நடப்பீர்கள்.

ஆக, இந்தத் தரத்தைத்தான் ஒரு நம்பிக்கையாளர் ஓர் இறையச்சமுடையவர் பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். ரமலான் கடந்துவிட்டது என்றாலும், நாம் அந்தத் தரத்தை பெறுவதற்கு முயற்சி செய்ய முடியும். நம்மில் அந்தத் தரத்தைப் பெற்றுவிட்டவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள். நம்முடைய ஒவ்வொரு சொல் மற்றும் செயலிலும் அல்லாஹ்வின் ஆதிக்கம் இருக்கும். நம்முடைய ஒவ்வொரு செயலும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்கும்.

நம் நடை, உடை, பாவனை ஆகிய அனைத்தும் சுருக்கமாக, ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். இது இருக்கும்போது தான் நாம் அல்லாஹ்வின் ஒளியிலிருந்து பதிலாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நமது நோக்கமாக இருக்கும். அப்போதுதான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்போம். நாம் ஒரு முயற்சியுடன் நமது வாக்குறுதியை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போம். இந்தத் தூய மாற்றத்தை நாம் நம் வாழ்வின் அங்கமாக ஆக்குவதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை ஆயின், அதற்காக முயற்சி செய்யவில்லை ஆயின், நம்முடைய வாதங்கள் தவறாகும்.

பின்னர், ரமலானில் நாம் தற்காலிகமாக செய்த நன்மைகளும் நமக்கு எந்தப் பயனும் அளிக்காது.

எனவே திருக்குர்ஆனின் வசனத்தின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்த அந்த இறையச்சத்தைப் பெறுவதற்காக நாம் தொடர்ச்சியாக முயற்சி செய்கிறோமா? என்ற சிந்தனையோடு எப்பொழுதும் நம்மை சுய ஆய்வு செய்ய வேண்டும். நாம் நம் வாழ்வை இவ்வாறு அமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறோம் என்றால், நிச்சயமாக நாம் ஷைத்தானோடு போரிடுவதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம். பின்னர், ஷைத்தானுடனான போரில் அல்லாஹ் நமக்கு உதவியும் புரிவான்.

மேலும், ஷைத்தானின் ஒவ்வொரு தாக்குதலையும் தோல்வியுறச் செய்துவிடுவான். ஷைத்தானோ இந்தக் காலத்தில் நம்மை எல்லாப் பக்கத்திலிருந்தும் சூழ்ந்துள்ளான். இறைவனின் உதவியின்றி அவனது பிடியிலிருந்து வெளியேறுவது சாத்தியமே இல்லை. மேலும், இறைவனின் உதவி இறையச்சத்தின் படி நடக்கக்கூடியவர்களுக்கு கிடைக்கின்றது.

நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்! இந்தக் காலமோ குறிப்பாக, ஷைத்தானின் தாக்குதலுக்கான காலமாகும். தனது அனைத்து விதமான சதித் திட்டங்கள், சூழ்ச்சிகள் மற்றும் ஆயுதங்களால் ஷைத்தான் தாக்குதல் தொடுக்கின்றான். எத்தகைய அச்சுறுத்தும் தாக்குதல் என்றால், அதற்கான உதாரணம் முன்னர் கிடைத்ததில்லை. எனவே இத்தகைய சூழ்நிலையில், குறிப்பாக அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டிய தேவை உள்ளது.

தொலைக்காட்சி ஆகட்டும் அல்லது சமூக ஊடகங்கள் ஆகட்டும் அல்லது இதர நிகழ்ச்சிகள் ஆகட்டும் அல்லது பிள்ளைகளின் பள்ளிக் கூடம் ஆகட்டும் அல்லது அவர்களுடைய நிகழ்ச்சிகள் ஆகட்டும் எல்லா இடத்திலும் ஷைத்தான்

தஜ்ஜால் மூலமாக எப்படிப்பட்ட ஒரு அச்சமூட்டுகின்ற சூழலை உருவாக்கி விட்டான் என்றால், இறைவனின் உதவியின்றி அதிலிருந்து வெளியேறுவது சாத்தியமே இல்லை.

இப்போது நம்முடைய பிள்ளைகளையும் அடுத்த தலைமுறைகளையும் தஜ்ஜால் மற்றும் ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவது தொடர்பான கவலையே எல்லாவற்றையும் விட அதிகமாக உள்ளது. அதற்கான அதிக தேவையும் உள்ளது. அதற்காக ஒவ்வோர் அஹ்மதி பெற்றோரும், எல்லா அஹ்மதி பெற்றோர்களும் முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்பும் முயற்சி செய்ய வேண்டும். அதற்காக அறிவுடைய, பருவ வயதை அடைந்த ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வுக்கு முன் குனிந்தவாறு அல்லாஹ்விடம் உதவி கோரியவாறு இறையச்சத்தின் உயரிய தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு நாம் அல்லாஹ்வின் உதவியோடு தஜ்ஜாலை எதிர் கொள்ள முடியும்.

ரமாலானுக்குப் பிறகும் நாம் Relax ஆகிவிடக் கூடாது. நிம்மதியாக அமர்ந்து விடக்கூடாது. மாறாக, நமது திருக்குர்ஆன் ஞானத்தை மார்க்க ஞானத்தை அதிகரிப்பதற்கான சிறப்பான முயற்சியை செய்ய வேண்டும். இவ்வாறு நமது வீடுகளில் ஒரு சிறப்பான சூழல் நிரந்தரமாக நிலைபெற்றிருக்கும். நம்முடைய இறைவணக்கங்களை பாதுகாக்க வேண்டும். ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக துஆக்களின் பக்கம் சிறப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

ஷைத்தானின் சதித் திட்டங்கள் மற்றும் சூழ்ச்சிகள் பற்றி எடுத்துரைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நினைவிற் கொள்ள வேண்டும்! உண்மையில் ஷைத்தானின் வெளிப்பாடுதான் தஜ்ஜால் எனப்படுகிறது. அதற்கு நேர்வழியில் இருந்து வழிகெடுப்பவன் என்பது பொருளாகும். ஆனால், இறுதி காலம் பற்றி முந்தைய வேதங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அப்போது ஷைத்தானோடு அதிக போர்கள் நடைபெறும். ஆனால், கடைசியில் ஷைத்தான் தோல்வியடைந்து விடுவான். இறையச்சத்தின்படி செயல்பட்டு வந்தால் எதிர் கொண்டால் ஷைத்தான் தோற்றுவிடுவான் என்ற நம்பிக்கையையும் வழங்கி விட்டான்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஆக, ஒவ்வொரு நபியின் காலத்திலும் ஷைத்தான் தோல்வியடைந்து வந்தான். ஆனால், அது கற்பனை வடிவில் தான் இருந்தது. மஸீஹுடைய கைகளாலேயே அவன் உண்மையான முறையில் தோல்வி அடைவது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இறைவன் இந்த அளவு வெற்றிக்கான வாக்குறுதி அளித்துள்ளான். கூறுகின்றான்:

جَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ

அதாவது உம்மை உண்மையாகப் பின்பற்றுபவர்களையும் கியாமத் வரை மற்றவர்கள் மீது மேலோங்கச் செய்வேன். (ஆலிஇம்ரான்:56)

எனவே உண்மையான பின்பற்றுபவராக ஆவதற்கு அன்னாரது போதனைகள் படி அமல் செய்வதற்கு இறையச்சத்தை மேற்கொள்ளள வேண்டும். ஆக, கூறுகின்றார்கள்: ஷைத்தான் இந்த இறுதி காலத்தில் முழு ஆற்றலுடன் போர் புரிகின்றான். ஆனால், நமக்கே இறுதி வெற்றி கிடைக்கும். இன்ஷாஅல்லாஹ். (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 60, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே, ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்கான மற்றும் வெற்றியை வழங்குவதற்கான வாக்குறுதியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அளித்துள்ளான். அன்னாருக்கும் இரண்டு, மூன்று முறை இல்ஹாம் வந்தது. ஆனால், அன்னாரை உண்மையாக பின்பற்றுபவர்களே அன்னாரது போதனைகளின்படி அமல் செய்தவர்களே அதில் உண்மையான பலனைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள்.

இது தொடர்பாக ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவன் என்னை நிராகரிப்பவர்கள் மற்றும் எனக்கு எதிராக இருப்பவர்களைக் காட்டிலும் என்னைப் பின்பற்றுபவர்களை கியாமத் வரை மேலோங்கச் செய்வான் என்பது உண்மைதான்; ஆனால், என் கையில் பைஅத் செய்வதனால் மட்டும் ஒவ்வொரு நபரும் பின்பற்றுபவர்களில் நுழைந்து விட முடியாது. எவர் தன்னுள் பின்பற்றுதலுக்கான முழு தன்மையையும் உருவாக்கிக் கொள்வதில்லையோ அதுவரை அவர் பின்பற்றுபவர்களைச் சேர்ந்தவராக முடியாது.

எப்போது வரை முழுமையாக பின்பற்றுவதில்லையோ, கட்டுப்படுவதில் தன்னை மாய்த்துக் கொள்ளும் அளவிற்குப் பின்பற்றுவதில்லையோ அடிச்சுவட்டில் செல்வதில்லையோ அப்போது வரை பின்பற்றுதல் எனும் சொல் பொருந்தாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதிலிருந்து தெரியவருவதாவது, எனக்குக் கட்டுப்படுவதில் தம்மை மாய்த்துக் கொள்ளக்கூடிய மற்றும் முழுமையாக எனக்குக் கட்டுப்படக்கூடிய அத்தகைய ஜமாஅத்தை அல்லாஹ் எனக்காக நிர்ணயித்துள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 299)

இப்படிப்பட்ட ஜமாஅத்தை அல்லாஹ் வழங்கியே தீருவான். அது நாமோ அல்லது மற்ற மக்களோ! இன்று இருப்பவர்களோ ருக்கலாம் அல்லது நாளை வருபவர்களோ அல்லது இதற்கு முன் சென்றுவிட்டவர்களோ அல்லது நம்மில் சிலரோ அல்லது பெரும்பாலானவர்களோ. (எவ்வாறாயினும்) அன்னாருக்கு இந்த ஜமாஅத் கிடைக்கத்தான் செய்யும். இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும்.

எனவே, இந்தச் சொற்கள் நம்மை மிகவும் அசைத்து விடக்கூடியவையாகும். நமது பின்பற்றுதலின் தரம் என்ன? என்று நம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்காகவும், தம்மை உண்மையாகப் பின்பற்றுபவர்களுக்காகவும் செய்த அந்த துஆக்களுக்கும் நாம் உரியவர்களாக ஆகிறோமா? அன்னாரை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்காக அல்லாஹ் அன்னாரிடம் வாக்குறுதி அளித்திருந்த அல்லாஹ்வின் அந்த அருட்களையும் நாம் ஈர்க்கக்கூடியவர்களாக இருக்கின்றோமா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தின் மக்களிடம் பார்க்க விரும்பும் இறையச்சத்தின் அந்தத் தரத்தைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்கின்றோமா? ஒருவேளை இல்லையென்றால், மேலும் சில நாட்களின் துஆக்கள் மட்டும்தான் ரமலானின் துஆக்கள் மட்டும் தான், என்றால் பின்னர், சில நாட்களின் இறைவணக்கங்களும் அழுகையும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வாக்குறுதியளித்திருந்த அந்த அருட்கொடைகளுக்கு நம்மை வாரிசாக்குதில்லை.

பின்னர், இது தொடர்பாக அன்னார் (அலை) நூஹ் நபியின் கப்பல் எனும் நூலில் மேற்கொண்டு இவ்வாறு கூறுகின்றார்கள்: தெளிவாகட்டும்! வெறும் நாவளவில் மட்டும் பைஅத் செய்வது ஒரு

விஷயமே கிடையாது. மனஉறுதி அதாவது, எண்ணம் மற்றும் துஆ அதனுடன் இருக்க வேண்டும். மனஉறுதியுடன் அதன்படி அமல் இல்லாத வரை நாவால் மட்டும் பைஅத் செய்துவிட்டோம் என்று ஒப்புக் கொள்வது ஒன்றுமற்றது. எண்ணமும் இருக்க வேண்டும். துஆவும் இருக்க வேண்டும். பிறகு, முழுமையான அமல் இருக்க வேண்டும். (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின், தொகுதி 19, பக்கம் 10)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எவர் ஒருவர் என்னுடைய போதனைகளின் படி முழுமையாக அமல் செய்கின்றாரோ அவர் எனது வீட்டில் நுழைகின்றார். அது குறித்து இறைவனின் கூற்றில் اِنِّيْ اُحَافِظُ كُلَّ مَنْ فِي الدَّارِ என்று வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, உமது வீட்டின் நான்கு சுவற்றுக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும் நான் காப்பாற்றுவேன்.

எனவே, ஒவ்வொரு கஷ்டத்தில் இருந்தும் ஒவ்வொரு சிரமம் மற்றும் இன்னலில் இருந்தும், தப்புவதற்கான இந்த யுக்தியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறியுள்ளார்கள்:

என்னுடைய போதனைகளின்படி களங்கமற்றவர்களாக ஆகி அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருவதற்கு முயற்சி செய்யுங்கள். பின்னர், அல்லாஹ் உங்களை எவ்வாறு ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுகின்றான் என்று பாருங்கள்! இன்னும் சொல்வதாயின், எவற்றைப் பயன்படுத்தி நாம் ஷைத்தான் மீது ஆதிக்கம் பெறுவோமோ அந்த ஆயுதங்களால் அல்லாஹ் நம்மை தயார் படுத்தி விடுவான்.

நாம் தப்பித்துக் கொள்பவர்களாக மட்டுமே அல்லாமல் அதற்கும் மேற்பட்டு அவனை அழிக்கக்கூடியவர்களாகவும் ஆகிவிடுவோம். அதாவது ஷைத்தானை நிரந்தரமாக விலக்கக் கூடியவர்களாகவும் தஜ்ஜாலின் தாக்குதல்களில் இருந்து தப்பிப்பவர்களாகவும் இருப்போம். அவனை அழிப்பவர்களாக இருப்போம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

ஆனால், இதை நினைவிற் கொள்ள வேண்டும்! அவன் மரணிப்பது, அதாவது ஷைத்தான் மரணிப்பது என்பது ஷைத்தான் மரணித்து விட்டான் என்று நாவால் கூறிவிட்டோம்; எனவே அவன் மரணித்து விடுவான் என்ற அளவு மட்டும் அல்ல.

மாறாக, ஷைத்தான் மரணித்து விட்டான் என்பதை நீங்கள் செயல் ரீதியாக காட்ட வேண்டும். ஷைத்தானின் மரணத்தைப் பேச்சால் அல்ல ; மாறாக, நிலையால் வெளிப்படுத்த வேண்டும். ஷைத்தான் மரணித்து விட்டான் என்று வாயால் மட்டும் அறிவித்துக் கொண்டு இருக்காதீர்கள். மாறாக, நமது ஒவ்வோர் அமலும் நமது ஒவ்வொரு நிலையும் நாம் நமது ஷைத்தானைக் கொன்றுவிட்டோம் என்ற விஷயத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இறுதி மஸீஹின் காலத்தில் ஷைத்தான் முற்றிலும் மரணித்து விடுவான் என்று அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது. ஆக, ஷைத்தான் ஒவ்வொரு மனிதனோடும் இருக்கின்றான். ஆனால், கண்ணியத்திற்குரிய நம் நபி (ஸல்) அவர்களுக்கான ஷைத்தான் முஸ்லிம் ஆகிவிட்டான். இது ஓர் உதாரணம் ஆகும். நம் முன் சுன்னத்தை எடுத்துரைத்துள்ளார்கள். நாம் ஷைத்தானைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் என்றால், இந்த சுன்னத்தின்படி செயல்பட வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறே, இந்தக் காலத்தில் ஷைத்தான் முற்றிலும் வேரறுக்கப்படுவான் என்று அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது. லா ஹவ்ல ஓதுவதனால் ஷைத்தான் ஓடுகிறான் என்பதை நீங்கள் அறிவீர்கள். லா ஹவ்ல ஓதுங்கள். ஷைத்தான் ஓடுகிறான். ஆனால், வெறும் வாயளவில் லா ஹவ்ல ஓதுவதனால் கூறுவதனால், ஓடிவிடும் அளவுக்கு அவன் சாதாரணமானவன் அல்ல.

لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ

என்று கூறிவிட்டோம் என்றால், ஷைத்தான் ஓடிவிடுவான் என்பதல்ல.

இவ்வாறு நூறு முறை லா ஹவ்ல ஓதப்பட்டாலும் ஓட மாட்டான். மாறாக, எவருடைய ஒவ்வோர் அணுவிலும் لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ ஊடுருவி விடுகிறதோ எவர் எல்லா நேரமும் இறைவனிடமிருந்தே உதவி ஒத்தாசையை வேண்டுகிறாரோ மேலும், அவனிடமிருந்தே பலன் பெற்றுக் கொண்டிருக்கின்றாரோ அவர் ஷைத்தானிடமிருந்து காப்பாற்றப்படுகிறார் என்பதே உண்மையான விஷயம் ஆகும். உள்ளத்திலிருந்து ஓசை எழ வேண்டும். அர்த்தம் தெரிந்திருக்க வேண்டும். வெறும் கூற்றாக மட்டும் இருக்கக் கூடாது. மேலும் அவர்களே வெற்றி பெறுபவர்கள் ஆவர். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 61)

பிறகு, தமது ஒரு சபையில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

**நினைவிற் கொள்ளுங்கள்! இறைவன் திருக்குர்ஆனை துஆவுடனேயே ஆரம்பித்துள்ளான். பிறகு, அதை துஆவுடனேயே முடிக்கவும் செய்துள்ளான். ஆக, இதன் பொருள் மனிதன் இறைவனின் அருளின்றி தூய்மை அடையவே முடியாது. அந்த அளவுக்கு மனிதன் பலவீனமானவன் ஆவான் என்பதாகும். இதை அன்னார் (அலை) ஒரு சபையில் கூறினார்கள்.**

அதன் அறிக்கையில் பிறிதோரிடத்தில் மேற்கொண்டு இவ்வாறான வாக்கியமும் வருகிறது. அதாவது, **உங்களை நீங்களே தூயவர் என்று கூறிக் கொள்ளாதீர்கள். ஏனெனில், இறைவன் தூய்மைப்படுத்தாத வரை எவரும் தூயவர் அல்ல.**

எவ்வாறு இருப்பினும், அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவனிடமிருந்து உதவியும் ஆதரவும் கிடைக்காத வரை இந்த நன்மையில் முன்னேறவே முடியாது. நன்மையில் முன்னேறுவதற்கு இறைவனின் உதவி தேவை. ஒரு ஹதீஸில் வந்துள்ளது:

இறைவன் உயிர் பெறச் செய்தவரைத் தவிர மற்ற அனைவரும் மரணித்தவர்கள் ஆவர். இறைவன் நேர்வழி வழங்கியவரைத் தவிர மற்ற அனைவரும் வழிதவறியவர்கள் ஆவர். இறைவன் பார்வை வழங்கியவரைத் தவிர, மற்ற அனைவரும் குருடர்கள் ஆவர்.

எனவே, எப்போது வரை இறைவனின் அருள் கிடைக்காதோ


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அப்போது வரை உலகத்தின் மீதான நேசம் எனும் தூக்குக் கயிறு கழுத்தில் மாலையாகக் கிடக்கும். எவர் மீது அல்லாஹ் தனது கருணையைப் புரிகின்றானோ அவரே அதிலிருந்து விடுதலை அடைகிறார்.

ஆனால் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்! இறையருளும், துஆவிலிருந்தே ஆரம்பம் ஆகின்றது. அல்லாஹ்வின் அருளைப் பெற வேண்டும் என்றால் அதற்காகவும் துஆவே செய்ய வேண்டி வரும். ஆனால், வாயால் பிதற்றி விடுவதுதான் துஆ என்று கருதாதீர்கள். மாறாக, துஆ ஒருவகையான மரணம் ஆகும். அதற்குப் பிறகு வாழ்வு கிடைக்கின்றது. பஞ்சாபி மொழியில் ஒரு கவிதை உள்ளது.

ஜோ மங்கே ஸோ மர்ரஹே மரே ஸோ மங்கன் ஜா

அதாவது (துஆ) கேட்கக்கூடியவர் தன் மீது ஒரு மரணத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டி வருகிறது. எனவே மரணத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான துணிச்சல் இருக்கிறது என்றால், பிறகு கேட்கக்கூடியவராக ஆகுங்கள். இதை செய்ய முடிந்தால், செய்வீர்கள் என்றால் பிறகு கேட்கக்கூடியவராக ஆகுங்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: துஆவில் ஒரு காந்த சக்தி இருக்கின்றது. அது அருளையும், கருணையையும் தன்பால் ஈர்க்கின்றது. வெறும் வாயால்

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ

என்று கூறிக் கொண்டே இருந்து, இன்ன வியாபாரத்தை இப்படி செய்ய வேண்டும் என்ற சிந்தனை உள்ளத்தில் இருக்கின்றது என்றால், நாவு ஒருபக்கம் செல்கிறது; மூளையும் உள்ளமும் வேறு எங்கோ செல்கிறது என்றால் இன்ன விஷயம் பாக்கி இருக்கின்றது; இந்த வேலை இவ்வாறு நடந்திருக்க வேண்டும்; இப்படி ஆகிவிட்டால் இதை செய்வோம் என உலக விஷயங்கள் அதிகம் மூளையில் ஓடுகின்றன மேலும் நாவில் வெளிப்படையாக மட்டும் துஆ வெளிவருகிறது என்றால் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இது வெறும் வயதை வீணடிப்பதாகும். மனிதன் இறைமறைக்கு முன்னுரிமை அளிக்காத வரை அதற்கேற்ப செயல்படாத வரை அவனது தொழுகைகள் வெறும் நேரத்தை வீணடிப்பதாகும். அல்லாஹ் நமக்குத் திருக்குர்ஆனில் வழங்கியுள்ள கட்டளைகளைப் படியுங்கள். ரமலானில் நாம் படித்தும் வந்துள்ளோம். தர்ஸும் கேட்டு வந்துள்ளோம். அவற்றின்படி செயல்படுங்கள். பாருங்கள்! பிறகு, நீங்கள் கழிக்கும் வாழ்வு அசல் வாழ்க்கையாகும். அது எப்படிப்பட்ட வாழ்வு என்றால், அல்லாஹ் அருள் புரிந்த அந்த மக்களின் வாழ்வாகும்.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

قَدْ اَفْلَحَ الْمُؤْمِنُوْنَ۔ الَّذِيْنَ هُمْ فِيْ صَلَاتِهِمْ خٰشِعُوْنَ

என்று திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது. அதாவது, துஆ செய்து செய்து மனிதனின் உள்ளம் இறை சந்நிதியில் எந்த அளவு மனத் தூய்மை மற்றும் உண்மையுடன் விழுந்து விட வேண்டும் என்றால் அதிலேயே மூழ்கி விட வேண்டும். எல்லா சிந்தனைகளையும் அழித்து விட்டு அவனிடமிருந்து மட்டுமே அருளையும் உதவியையும் வேண்ட வேண்டும். எப்படிப்பட்ட ஓர் ஒருமைப்பாடு உருவாகி விட வேண்டும் என்றால், ஒரு வகையான உருக்கம் மற்றும் (உள்ளத்தை) கரைக்கும் நிலை உருவாகி விட வேண்டும். அப்போது வெற்றிக்கான கதவு திறந்து விடுகின்றது. எவர்களின் தொழுகைகள் இறையச்சத்தால் நிறைந்திருக்கின்றனவோ அவர்களே வெற்றி பெறக்கூடிய நம்பிக்கையாளர்கள் ஆவர். உள்ளம் முற்றிலுமே உருகிப் போகும் போதுதான் வெற்றிக்கான கதவுகள் திறக்கின்றன.

மனிதன் அல்லாஹ்வுக்காகவே ஆகி துஆ செய்யும்போது தான் அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனது உதவி வருகிறது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: வெற்றிக்கான கதவு திறந்து விடுகிறது. அதன் மூலம் உலகின் மீதான நேசம் தணிந்து விடுகிறது. ஏனெனில், இரண்டு அன்புகள் ஓரிடத்தில் ஒன்றிணைய முடியாது.

இது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹம் குதா காஹீ வெஹ்மே
துன்யாயே தூன்
ஈன் கயால் அஸ்த் வ மஹால்
அஸ்த் வ ஜுனூ(ன்)

அதாவது, நீ! இறைவனையும் வேண்டுகிறாய், இந்த அற்பமான உலகையும் வேண்டுகிறாய்! இது வெறும் கற்பனையாகும். இவையோ சிந்தனைகள் ஆகும். இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றிணைய முடியாது. இவை பித்துபிடித்த விஷயங்கள் ஆகும். பைத்தியக்காரத்தனமாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதனாலேயே இதற்குப் பிறகே இறைவன் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَ

இங்கு வீணான விஷயம் என்பது உலகைக் குறிக்கின்றது. அதாவது, மனிதனுக்குத் தொழுகையில் இறைவன் மீதான அச்சமும், உருக்கமும் உருவாக ஆரம்பிக்கும் போது, பின்னர் அதன் விளைவாக அவனது உள்ளத்திலிருந்து உலகத்தின் மீதான நேசம் தணிந்து விடுகின்றது.

அதற்கு அர்த்தம் அவன் விவசாயத்தை அல்லது வியாபாரத்தை அல்லது தொழிலை விட்டு விடுகின்றான் என்பது அல்ல. மாறாக, ஏமாற்றம் அளிக்கக்கூடிய, இறைவனை விட்டும் கவனமற்றவனாக ஆக்கக் கூடிய உலகப் பணிகளிலிருந்து விலக ஆரம்பிக்கின்றான். பின்னர், அல்லாஹ்வின் கட்டளைகளைகளுக்கு எதிராகவுள்ள உலகப் பணிகளிலிருந்து தவிர்ந்திருக்கின்றான்.

அதற்கு மேற்கொண்டு விளக்கமாக, அடுத்து ஓரிடத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இது ஒரு சபையில் கூறப்பட்டதாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

رِجَالٌ لَّا تُلْهِيْهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ

என்று அல்லாஹ் கூறுகின்றான். (24:38)

அதாவது பெரும், பெரும் வியாபரத் தொழிற்சாலைகளிலும் ஒரு நொடிப்பொழுதும் எம்மை மறக்காத நம் அடியார்களும், இருக்கின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவனுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் உலகவாதிகள் என்று அழைக்கப்பட மாட்டார்கள். மாறாக, எவருக்கு இறைவன் நினைவில் இல்லையோ அவரே உலகவாதியாவார்.

எவ்வாறாயினும், அடுத்து, இறைவனின் அடியார்களைப் பற்றிய இலக்கணத்தைக் கூறிய வண்ணம் அன்னார் (அலை) கூறினார்கள்:

அப்படிப்பட்ட மக்களின் அழுது மன்றாடுதல், அதாவது இறை அடியார்களின் அழுது மன்றாடுதல், அழுது புலம்புதல் மற்றும் வேண்டிக் கேட்டல் ஆகியவற்றின் விளைவாக மார்க்கத்தின் மீதான நேசத்தை உலகத்தின் மீதான நேசம், பேராசை மற்றும் சுகபோகங்கள் ஆகிய அனைத்திற்கும் மேல் வைக்கிறார். இதுதான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதற்கான இலக்கணமாகும். ஏனெனில், ஒரு நற்செயல் மற்றொரு நற்செயலைத் தன் பக்கம் ஈர்க்கின்றது. மேலும், ஒரு தீய செயல் மற்றொரு தீய செயலின் பக்கம் தூண்டுகிறது என்பது விதியாகும்.

அந்த மக்கள் தம்முடைய தொழுகைகளில் அழுது மன்றாடும்பொழுது அதனுடைய கட்டாயமான விளைவாக இயல்பாகவே அவர்கள் வீணானவற்றிலிருந்து விலகி இருக்கின்றார்கள். இந்த அசுத்தமான

உலகில் இருந்து ஈடேற்றம் அடைகின்றார்கள். இந்த உலகத்தின் மீதான நேசம் தணிந்து இறைவன் மீதான நேசம் அவர்களிடம் உருவாகிவிடுகிறது. தொழுகைகள் அவர்களை நன்மைகளின் பக்கம் அழைத்துச் செல்கின்றன. உலகத்தின் வியாபாரங்கள் இருந்தும் கூட உலகம் அவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. கடந்த குத்பாவில் நான் لَا اِلٰهَ اِلَّا اللّٰه என்பதற்கு விளக்கம் அளித்தது போன்று, அவர்களின் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் நேசத்திற்குரியவனாகவும் அல்லாஹ் இருக்கின்றான்.

எனவே நம்முடைய ஷைத்தானைக் கொல்வதற்காக இந்தத் தரத்தை தான் நாம் மேற்கொள்ள வேண்டும். ஷைத்தானை விரட்டுவதற்காக லா ஹவ்ல ஓதுகிறோம் என்றால், பிறகு எல்லா ஆற்றல்களுக்கும் சக்திகளுக்கும் எஜமானன் இறைவனே ஆவான்; அல்லாஹ்வின் அனுமதியின்றி ஓர் இலை கூட உதிர முடியாது என்ற விஷயம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம்முடைய சிந்தனையில் பதிந்து விடவேண்டும்.

நம்மில் பெரும்பாலார் இதுவே எங்களுடைய ஈமான் ஆகும்; நாங்கள் ஏற்கத் தான் செய்கின்றோம் என்று வாயளவில் கூறி விடுகின்றார்கள். ஆனால், செயல் ரீதியில் வெளிப்பாட்டுக்கான நேரம் வரும்பொழுது பின்னர் மற்ற அச்சங்கள் இருக்கின்றனவே அதாவது உலக அச்சங்கள் இருக்கின்றனவே, நேசங்கள் இருக்கின்றனவே, ஆசைகள் இருக்கின்றனவே அவை அல்லாஹ்வின் மீதான நேசத்தை விட மேலோங்கி விடுகின்றன.

எனவே அல்லாஹ்வின் மீது உண்மையான ஈமானும், அல்லாஹ்வை உண்மையாக வழிபடுவதும் எப்படி இருக்க வேண்டும் என்றால், அதனுடைய தாக்கம் நமது உடல் மற்றும் ஆன்மா ஆகிய இரண்டின் மீதும் ஏற்பட வேண்டும். இறை வணக்கங்களுக்கான இந்தத் தரம் இருக்கும் பொழுது பின்னர், வெளிப்படையான அடிப்படை நல்லொழுக்கங்களும் உயர்வை நோக்கி அழைத்துச் செல்கின்றன. உள்ளமும், சிந்தனையும் ஆன்மாவும் தூய்மை அடைகிறது. ஷைத்தானின் ஒவ்வொரு தாக்குதல் மற்றும் ஒவ்வொரு வகையான ஏமாற்றத்தில் இருந்தும், மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருவதனால் தப்பிக்கின்றான்.

பின்னர், இறை வழிபாட்டிற்கான எப்படிப்பட்ட தரத்தை மனிதன் பெற்று விடுகின்றான் என்றால், அதற்கிடையில் அல்லாஹ் அல்லாத எவையும் நுழைய முடியாது. தொழுகை மற்றும் இறை வணக்கத்திற்கான உரிமையை நிறைவேற்றுவதோடு நாம் இந்த விஷயத்தையும் முன் நிறுத்த வேண்டும். அதாவது, உரிமையை நிறைவேற்றுவது தொடர்பாக நபிமொழியில் இவ்வாறு வந்துள்ளது:

தொழுகை இறை வணக்கத்தின் சாறாகும். நாம் இந்த சாறை பெறுவதற்கு முயற்சி செய்யும்பொழுது பின்னர், தொழுகைக்கான உரிமையையும் நிறைவேற்றக்கூடியவர்களாக ஆவோம். இறை வணக்கத்திற்கான உரிமையையும் நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவோம். அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறக் கூடியவர்களாக ஆவோம். நமது ஆன்மா மற்றும் உடலிலும் ஒரு புரட்சியை உருவாக்கக் கூடியவர்களாக திகழ்வோம்.

இல்லை என்றால், வெளிப்படையான தொழுகைகள் எந்தப் பயனையும் அளிப்பதில்லை. பள்ளிவாசலில் சென்று தொழுதுவிட்டு பின்னர் அநீதி அக்கிரமத்தில் உச்சத்தை அடைந்து விடக் கூடிய எண்ணற்ற தொழுகையாளிகள் இருக்கின்றனர். இந்தப் பயங்கரவாத அமைப்புகள் இருக்கின்றனவே, பெயர் தாங்கி முல்லாக்கள் இருக்கின்றனரே இவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயரில் என்னென்ன அநீதிகளை இழைக்கின்றார்கள்!

இந்த மக்கள் உலகத்தில் அமைதியை சீர்குலைத்து வைத்திருக்கின்றார்கள். இவர்களோ உலக நோக்கத்திற்காக அநீதி இழைக்கக் கூடிய அந்த உலகவாதிகளை விடப் பெரும் அநியாயக்காரர்கள் ஆவர். அவர்களோ உலக நோக்கத்திற்காக அநீதி இழைக்கின்றனர். ஆனால், இவர்களோ ரஹ்மான், ரஹீம், ஆகிய இறைவனின் பெயராலும், அகில உலகங்களுக்கும் அருட்கொடையான தூதர்(ஸல்) அவர்களின் பெயராலும் அநீதியிழைக்கின்றனர்.

எனவே அவர்களின் தீய முன்மாதிரிகள் ஓர் அஹ்மதியை இஸ்லாமிய போதனைகளின் உயர்தரமான முன்மாதிரிகளை நிலைநாட்டக்கூடியவராக ஆக்கக்கூடியதாக இருக்க வேண்டும். நம்முடைய தொழுகைகள், நம்முடைய இறை வணக்கங்கள் மற்றும் நம்முடைய துஆக்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவையாக இருக்க வேண்டும்.

நாம் இந்த நோக்கத்தைப் பெற்று விட்டால், பின்னர், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்துக்கான உரிமையையும் நிறைவேற்றிவிடுவோம். மேலும், ரமலானின் அருட்களிலிருந்தும் பலன் பெற்று விடுவோம்.

நம்முடைய தொழுகைகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும்? எவ்வாறு அதற்கான உரிமையை நிறைவேற்றுவது? என்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**நினைவிற் கொள்ள வேண்டும்! தொழுகை மூலமாக அனைத்துப் பிரச்சனைகளுமே எளிமையாகி விடுகின்றன. மேலும், எல்லா இன்னல்களும் அகன்று விடுகின்றன.** ஆனால், தொழுகை என்பது சாதாரண மக்கள் சம்பிரதாயமாக தொழக்கூடிய அந்தத் தொழுகையைக் குறிக்காது. மாறாக, எதன் மூலமாக மனிதனின் உள்ளம் கரைந்து விடுகிறதோ, உருகிவிடுகிறதோ இறைவனுடைய சன்னிதியில் விழுந்து மூழ்கி உருக ஆரம்பித்து விடுகிறதோ அப்படிப்பட்ட தொழுகையைக் குறிக்கிறது.

அடுத்து, இதனையும் புரிய வேண்டும். தொழுகையை பாதுகாப்பது இறைவனுக்கு அதற்கான தேவை இருக்கின்றது என்பதனால் அல்ல.

நாம் தொழுகின்றோம் அல்லது அதைப் பாதுகாக்கின்றோம் என்றால், இறைவனுக்கு நம்முடைய வழிபாடுகளுக்கான தேவை இருக்கின்றது என்பதற்காக அல்ல. இறைவனுக்கு நம்முடைய தொழுகைகளின் எந்தத் தேவையும் இல்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவனுக்கு நம்முடைய தொழுகைகளின் எந்தத் தேவையும் இல்லை. அவனோ அகில உலகங்களை விட்டும் தேவையற்றவன் ஆவான். அவனுக்கு யாருடைய தேவையுமில்லை.

மாறாக, அதனுடைய பொருள் மனிதனுக்குத் தேவை உள்ளது என்பதாகும். மனிதன் தனது நன்மையையே நாடுகின்றான் என்பது இதில் உள்ள இரகசியமாகும். மனிதன் தனது நன்மையை நாடுகின்றான். இதுதான் உண்மையாகும். எனவேதான், அவன் இறைவனிடம் உதவி கோருகின்றான். தன்னுடைய நன்மைகளுக்காக இறைவனிடம் உதவி கோருகின்றான். ஏனெனில், மனிதன் இறைவனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது உண்மையான நன்மையைப் பெற்று விடுவதாகும் என்பது உண்மையான விஷயம் ஆகும்.

அப்படிப்பட்ட நபருக்கு முழு உலகமும் எதிரியாகிவிட்டாலும் அவரை

அழிப்பதில் ஈடுபட்டிருந்தாலும் அவரை அசைக்கக் கூட முடியாது. அப்படிப்பட்ட நபருக்காக இறைவன் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மனிதர்களை அழிக்க வேண்டி வந்தாலும் அழித்து விடுகின்றான். அந்த ஒருவருக்காக லட்சக்கணக்கானவர்களை அழித்து விடுகின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ளுங்கள்! இந்தத் தொழுகை எப்படிப்பட்டது என்றால், அதனால் இந்த உலகமும் ஒளி பெற்று விடுகிறது; மார்க்கமும் ஒளிபெற்று விடுகின்றது. மனிதன் அல்லாஹ்விற்காக தொழுகின்றான் என்றால், இந்த இரண்டு விஷயங்களும் அவனுக்கு கிடைத்து விடுகின்றன. உண்மையில், அவனுக்கான உரிமைகளை நிறைவேற்றியவாறு தொழக்கூடியவனாக இருக்க வேண்டும். ஆனால், பெரும்பாலான மக்கள், தொழக் கூடியவர்கள் அதாவது அன்னார் (அலை) கூறுகின்றார்கள்; பெரும்பாலான மக்கள்மீது, தொழக்கூடியவர்கள்மீது தொழுகை சாபமிடுகின்றது.

அல்லாஹ் நமக்குத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ்வை கோபமடையச் செய்யக்கூடிய தொழுகைகளாக (அவை) ஒருபோதும் இல்லாமல் இருக்கட்டுமாக! நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசுகளாகக் கூடியவர்களாக இருப்போமாக! அல்லாஹ்வோடு தொடர்பை இணைத்தவாறு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள அந்த வாக்குறுதிகளில் இருந்து பங்கு பெறக் கூடியவர்களாக திகழ்வோமாக! நாம் நம்முடைய சந்ததிகளுக்கும் இப்படிப்பட்ட இறை வணக்கத்திற்கான வழக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருப்போமாக! அது அவர்களது நிலைத்திருத்தல் மற்றும் வருங்கால சந்ததிகளின் நிலைத்திருத்தலுக்கான உத்தரவாதம் ஆகட்டுமாக!

இது நடக்கும் பொழுது, பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று, உலகத்தின் எந்த ஏமாற்றமும், ஷைத்தானின் எந்தத் தாக்குதலும் நம்மை ஒன்றுமே செய்ய முடியாது. உலகம் ஆயிரம்தான் நமது அழிவு, நாசத்திற்கான திட்டம் தீட்டட்டும்! நமக்கு அதனால் எந்த ஓர் இழப்பையும் ஏற்படுத்த முடியாது. இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று அல்லாஹ் தன் அடியார்களுக்காக லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களையும் அழித்து விடுகின்றான்.

எனவே அல்லாஹ்வின் நேசம் மற்றும் அவனது திருப்தியைப் பெறுவதற்காக நாம் நம்முடைய இறை வணக்கங்களின் தரத்தை மிகவும் உயர்த்த வேண்டும். தஜ்ஜாலோ இந்தக் காலத்தில் அழியவிருக்கின்றான். இது அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதி ஆகும். இதில் எந்த சந்தேகமும் இல்லை. நாம் நம்முடைய இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்தியவாறு நம்முடைய நிலைமைகளை சீர்படுத்தியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்ததற்கான உரிமையை நிறைவேற்றிய அந்த மக்களில் இணைந்து விட்டால் இது நமது நற்பாக்கியமாக இருக்கும்.

இந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஒரு யுக்தியையும் எடுத்துரைத்துள்ளார்கள். அதாவது, அழுது மன்றாடுதல், உருகுதல் மற்றும் வேண்டிக் கேட்டல்.

அதாவது அழுதல், மேலும் மிக அதிகமாகத் தேம்பித் தேம்பி அழுதல் மற்றும் இறைவனுக்கு முன்னால் பணிவை மேற்கொள்வதன் மூலமாகவே கிடைக்கின்றது.

எனவே இந்த அந்தஸ்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். எவ்வாறு பெற வேண்டும்? அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உங்களது இரவு, உங்களது பகல் என எந்த நேரமும் துஆ இல்லாமல் இருக்கக் கூடாது. ஆக, இந்த நிலை ஏற்படும்போது பின்னர், நாம் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகிவிடுவோம். ஒவ்வொரு ஷைத்தானிய தாக்குதலும் தஜ்ஜாலிய தாக்குதலும் தோற்றுப் போகும்.

நாம் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளின்படி அமல் செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பப்படி வாழ்வை கழிப்பவர்களாக இருப்பதற்கு அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத் நிபந்தனைகளுக்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாக இருப்போமாக! அல்லாஹ்வின் திருப்தி நமது நோக்கமாக இருக்கட்டுமாக!

நமது நிலைமைகளை அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப ஆக்கக்கூடிய அத்தகைய தூய மாற்றங்களை நம்முள் ஏற்படுத்திக் கொள்ளாத வரை நிம்மதியாக அமர மாட்டோம் என்று உறுதி எடுக்கக் கூடியவர்களாக இருப்போமாக! நாம் ஒருபோதும் நமக்குள்ளும் நம்முடைய சந்ததிகளுக்குள்ளும் ஷைத்தானை நுழைய விடாமல் இருப்போமாக! அதற்காக இயன்ற அளவிலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோமாக! அதற்காக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் போதித்த அந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோமாக!

அது மட்டுமின்றி, உலகையும் ஷைத்தான் மற்றும் தஜ்ஜாலிடமிருந்து தூய்மையாக்குவதற்கு முழுமையாக முயற்சி செய்வோமாக! அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! தீயவர்களின் தீங்கை அவர்கள் மீதே திருப்புவானாக! பாகிஸ்தானில் வசிக்கக் கூடிய அஹ்மதிகள் சுயமும் தங்களுக்காக சிறப்பான அழுகை, மன்றாடலுடன் துஆ செய்யுங்கள். மூன்று நாட்கள் நான்கு நாட்கள் அல்லது ஒரு வார துஆக்கள் அல்ல. நிரந்தரமாக துஆக்கள் செய்யுங்கள். மேலும், உங்கள் வாழ்வை இறைவனின் திருப்திக்கு ஏற்ப அமைத்துக் கொள்வதற்கான உறுதி கொள்ளுங்கள்.

புர்கினாஃபாஸோவின் அஹ்மதிகளுக்காக பங்களாதேசத்தின் அஹ்மதிகளுக்காக அல்ஜீரியா மற்றும் உலகின் ஒவ்வொரு நாட்டின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எதிரியின் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக!. அவர்களின் ஈமான் மற்றும் நிச்சய உறுதியை வலுப்படுத்துவானாக!. அல்லாஹ் நமக்கு நம்மிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் துஆக்கள் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!. அவற்றை ஒப்புக் கொள்ளவும் செய்வானாக!

தமிழாக்கம் :
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * *

## முதல் பக்கத் தொடர்ச்சி... (தப்ஸீரே கபீர்)

ஏழைகளுக்கு உரிமை இருப்பதாக கூறியிருப்பதன் ஒரு காரணம் என்னவென்றால், உலகில் செல்வந்தர்களும், ஏழைகளும் மாறிக் கொண்டே இருக்கின்றனர். இன்று ஏழையாக இருக்கும் ஒருவர் ஒருகாலத்தில் செல்வந்தராக இருந்தார். மேலும் இன்று செல்வந்தராக இருப்பவர் ஒரு காலத்தில் ஏழையாக இருந்திருப்பார். அந்த காலத்து செல்வந்தர்கள் அவருடன் நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தனர். எனவே முழு உலகத்தையும் ஒட்டுமொத்த பார்வையில் பார்த்தால் பின்னர் எவருடைய செல்வமும் அவருக்கே உரிய செல்வமாக இருக்காது. இன்னும் கூறப்போனால், அதில் மற்றவர்களுக்கான உரிமையும் அடங்கியுள்ளது.

அதற்கான இரண்டாவது காரணம் என்னவென்றால், உலகின் அனைத்து பொருட்களையும் அல்லாஹ் மனித குலம் அனைத்திற்கும் படைத்திருக்கின்றானே தவிர ஸைது அல்லது பக்ருக்காக மட்டும் படைக்கவில்லை. ஆக, ஸைது அல்லது பக்ர் ஏதாவது காரணத்தினால் அதிக செல்வம் படைத்தவர்களாக ஆகிவிட்டால் அதனால் மற்ற மக்களின் உரிமை பொய்யாகிவிடாது. அவர்களும் உலகின் பொருட்களின் உரிமையில் ஸைது மற்றும் பக்ருடன் சரிசமமாக இணைந்திருக்கின்றனர். சிறப்பான உழைப்பின் காரணமாக ஸைது அல்லது பக்ருக்கான கூடுதல் உரிமையை இஸ்லாம் ஏற்றுக் கொள்கின்றது. ஆனால், மற்றவர்களுக்கு எந்த பங்கும் இல்லாத அளவிற்கு அவர்கள் முழுமையாக உரிமை படைத்திருப்பதை இஸ்லாம் ஒப்புக் கொள்ளவில்லை.

பயணிகளுக்கான உரிமை எவ்வாறு அமைந்துள்ளது என்றால், இவர்கள் மற்றோரிடத்திற்கு செல்லும்போது அவர்கள் இவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றனர். எனவே வேறொரு இடத்தைச் சேர்ந்த பயணிகளுக்கு தொண்டாற்றுவது அவர்களின் கடமையாகும். அப்போதுதான் விருந்து உபசரிப்பிற்கான உரிமை செலுத்தப்படும்.

வழிப்போக்கர்களின் உரிமை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஓர் ஊருக்கு செல்லும்போது பின்னர் மூன்று நாட்கள் வரை விருந்திற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஊர்வாசிகள் கொடுக்கவில்லையென்றால் என்ன செய்வது? என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு (அவர்களிடமிருந்து) பறித்துக் கூட பெற்றுக் கொள்ள முடியும். (அபூதாவூத் தொகுதி 3) இஸ்லாமிய நாகரீகம் நடைமுறையில் இருக்கும் அந்தக் காலத்திற்கான கட்டளை இதுவாகும். ஏனெனில், அந்த நாட்களில் ஏனைய மக்கள் அவரிடமிருந்து விருந்து உபசரிப்பிற்கான உரிமையை பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கட்டளை உலகில் நடைமுறைப்படுத்தப்பட்டால் பின்னர் ஹோட்டல்களின் காரணமாக உருவாகியுள்ள ஏராளமான சீர்கேடுகள் உலகில் இருந்து அகன்றுவிடும். மேலும் உயர்தரமான தர்பிய்யத்திற்கு ஒரு வழிமுறையாக இருக்கும் பயணம் ஏழைகளுக்கும் கூட எளிதாகிவிடும். ஆனால், வேதனை என்னவென்றால், முஸ்லிம்களும் கூட இந்தக் கட்டளையை மறந்துவிட்டனர். பயணிகளுடனான இந்த அழகிய நடத்தைக்கான இந்த பொதுவான கட்டளை உலகிலிருந்து ஏராளமான குழப்பங்களை அழிப்பதற்கு காரணியாக அமைகின்றது. ஏனெனில், சண்டைகளும், சச்சரவுகளும் வெறுப்புணர்வால் உருவாகின்றன. இவ்வாறு விருந்து உபசரிப்பிற்கான நடைமுறை அமலில் இருந்து பின்னர் வெறுப்புணர்வு அகன்றுவிட்டால் கிராமங்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான சண்டைகள் அழிந்துவிடும். மேலும் இந்தக் கட்டளையினால் கிராமங்கள் மற்றும் நகரங்களின் அமைப்பிற்கான அடித்தளமும் அமைக்கப்படும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 323, காதியான் பதிப்பு 2010)

## 12-ம் பக்கத் தொடர்ச்சி... (குத்பா பேருரை)

இது முன்னர் கூறப்பட்ட அதே மவ்லவியின் குறிப்பே ஆகும்.

அவர் தனது நூல் ஃபைஸே ரஹ்மானியில் அதனை வெளியிட்டு இருந்தார். பின்னர் அந்த முபாஹலாவிலிருந்து சில நாட்களுக்குள்ளேயே அவர் இறந்துபோனார். அதேபோன்று ஜம்முவைச் சேர்ந்த சிராக்தீன் சுயமாக முபாஹலா செய்தார். மேலும் , நம் இருவரில் எவர் பொய்யரோ அவரை இறைவன் அழித்துவிடுவான் என்று அவர் சுயமே எழுதினார். பின்னர், அவர் சில நாட்களுக்குள்ளேயே தனது இரு மகன்களுடன் பிளேக் நோயால் அழிந்து போனார். (ஹக்கீக்கத்துல் வஹீ, தொகுதி 22, பக்கம் 71, அடிக்குறிப்பு)

இவர் ஜம்முவைச் சேர்ந்த இரண்டாவது மவ்லவி ஆவார்.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: என் மீது எனது சமுதாயம் வகை வகையாக ஆட்சேபனைகளை முன் வைக்கின்றது. அவர்களின் ஆட்சேபனைகளைக் குறித்து எனக்கு எந்த கவலையும் இல்லை. நான் அதற்கு பயந்து உண்மையின் பாதையை விட்டுவிட்டால் அது மிக மோசமான நம்பிக்கையற்ற நிலையாக இருக்கும். ஒரு நபருக்கு அல்லாஹ் தன்புறமிருந்து அகப்பார்வையை வழாங்கியிருக்கின்றான். மேலும், சுயமே அவருக்கு வழிகாட்டியுள்ளான். மேலும், அவருக்கு தனது வார்த்தைகளையும், உரையாடல்களையும் வழங்கியுள்ளான். மேலும், ஆயிரக்கணக்கான அடையாளங்கள் அவரை உண்மைப்படுத்துவதற்காக காட்டியுள்ளான். அவ்வாறிருக்க, ஓர் எதிரியின் யூகங்களை ஒரு பொருட்டாக கருதி அந்த உண்மையின் கதிரவனிடமிருந்து எவ்வாறு முகத்தை விலக்கிக் கொள்ள முடியும்? என்று அவர்கள் சுயமே சிந்திக்க வேண்டும்!

மக்களின் பேச்சுக்களின் தாக்கத்திற்கு ஆளாகி உண்மையை எப்படி கைவிட முடியும்?

அன்னார் (அலை) கூறினார்கள்: உட்புற மற்றும் வெளிப்புற எதிரிகள் என்னிடம் குறை காண்பதில் மும்முரமாக உள்ளனர் என்பதையும் நான் பொருட்படுத்தவில்லை. ஏனெனில், அதன் மூலமாகவும் எனது கண்ணியமே நிரூபணம் ஆகின்றது.

அவர்கள் எனது குறையைத் தேடுகின்றனர் என்றால் அதன் மூலமும் எனது கண்ணியம் நிரூபணம் ஆகின்றது. அதற்கான காரணம் இதுவாகும்.

அதாவது, அது எவ்வாறு நிரூபணம் ஆகின்றது என்றால், நான் எல்லா வகையான குறைகளையும் என்னுள் வைத்துள்ளேன் என்றால், இன்ன இன்ன குறைகள் என்னிடம் இருப்பதாக எதிரிகள் கூறுகின்றனர்; அவர்களின் கூற்றின்படி;

நான் உடன்படிக்கையை மீறுபவன், பெரும் பொய்யன், தஜ்ஜால், இட்டுக்கட்டுபவன், நம்பிக்கைத் துரோகி, தடுக்கப்பட்டவற்றை உண்பவன், சமுதாயத்தைப் பிளக்கக் கூடியவன், குழப்பவாதி, கட்டுப்படாதவன், தீயவன், இறைவன் மீது சுமார் முப்பது வருடங்களாக இட்டுக்கட்டக் கூடியவன், நல்லவர்களையும், இறையடியார்களையும் ஏசிபேசுபவன், எனது ஆன்மாவில் தீங்கு, தீமை, தீய நடத்தை, நஃப்ஸை வணங்குதல் ஆகியவற்றை தவிர்த்து வேறு எதுவும் கிடையாது. மேலும் உலகத்தை அலங்கரித்துக் கொள்வதற்காக மட்டுமே நான் இந்தக் கடையை திறந்துள்ளேன். மேலும் அவர்களின் கூற்றின்படி; இறைவனின் மீதும் எனக்கு நம்பிக்கை கிடையாது.நவூதுபில்லாஹ். மேலும் உலகின் அனைத்து தீமைகளும் என்னிடம் உள்ளன. ஆனால் இந்த அனைத்து விஷயங்களுக்குப் பிறகும் அதாவது உலகின் அனைத்து தீமைகளும் என்னிடம் இருந்தபோதிலும், மேலும் எல்லா வகையான அநீதிகளாலும் எனது உள்ளம் நிறைந்திருந்தபோதிலும், எண்ணற்றவர்களின் செல்வத்தை நான் விழுங்கிவிட்டபோதிலும், (நான் பிறரின் செல்வத்தை விழுங்கிவிட்டதாக இந்த மக்கள் கூறுகின்றனர்.) (வானவர்களைப் போன்று தூயவர்களாக திகழும்) ஏராளமான மக்களை நான் ஏசிபேசுகின்றபோதிலும் எல்லா வகையான தீமைகள் மற்றும் அக்கிரமங்களிலும் மிக அதிகமாக நான் பங்கு வகித்திருந்தபோதிலும் பின்னர் இந்த விஷயத்தில் என்ன இரகசியம் உள்ளது? அதாவது, நானோ (அவர்களின் கூற்றின்படி) தீயவனாகவும், தீய நடத்தையுடையவனாகவும், நம்பிக்கை மோசடி செய்பவனாகவும், பொய்யனாகவும் இருக்கின்றேன். ஆனால் எனக்கு எதிராக வானவர்களின் பண்புகளைக் கொண்ட நபர் வரும்போது அவரே அழிக்கப்படுகின்றார். இதில் என்ன இரகசியம் அடங்கியுள்ளது? (சிந்தித்துப் பார்க்க வேண்டும்!)

எவர் முபாஹிலா செய்தாரோ அவரே அழிந்துபோனார். எவர் எனக்கு எதிராக தீய துஆ செய்தாரோ அந்த தீய துஆ அவர் மீதே விழுந்தது. எவர் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தாரோ அவரே தோல்வியுற்றார். (எதிரிகளின் கூற்றின்படி) அனைத்து தீமைகளும் அனைத்து தீய விஷயங்களும் என்னிடமே இருக்கின்றன. ஆயினும், என்னுடன் போட்டியிட எவர் வந்தாலும் அவரை அல்லாஹ் அழித்துவிடுகின்றான். மேலும் எனக்கு வெற்றியை வழங்குகின்றான். (அது எப்படி? சிந்திக்க வேண்டும்!) விநோதமான ஆட்சேபனைகள் என் மீது சுமத்தப்படுகின்றன.

இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்...

தமிழாக்கம் :

A. மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

## ஜுமுஆ பேருரை

**இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து தோன்றவிருந்தவர் நானே ஆவேன். பூமியிலிருந்து காணாமல் போன அந்த ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் தவறுகளை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன் ( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் முதலில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும் அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வடிவில் கொண்டு வருவான்**

**எந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவரின் காலம் ஒன்றாக உள்ளதோ அதேபோன்று பணியும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை மீண்டும் பூமியில் நிலைநாட்டுவது ஆகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார் என்பது உறுதியாக நிரூபணம் ஆகின்றது. அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாக وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்ற வசனம் உள்ளது**

**இரண்டாவது கூட்டம் மேற்கூறப்பட்ட வசனத்திற்கேற்ப ஸஹாபிகளுக்கு ஒப்பான கூட்டம் ஆகும். அந்தக் கூட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டம் ஆகும். ஏனெனில், இந்தக் கூட்டமும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை பார்க்கக் கூடியது ஆகும். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழிப் பெறக்கூடியக் கூட்டம் ஆகும். மேலும் اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வத்தில் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது**

**இறைவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானை புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்தை வழங்குவதற்காகவும் அனுப்பியுள்ளான். மேலும், அவனது உதவி மற்றும் அருளால் எனது கரத்தில் விண்ணின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அவனது நாட்டம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப (எனது) துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன**

**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**இதழ் எண் 19ல் வெளியான குத்பாவின் தொடர்ச்சி........**

அறிவு சார்ந்த அடையாளங்கள் மற்றும் உதவிகளைக் குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஒருமுறை காதியானில் ஓர் இந்து சகோதரர் என்னிடத்தில் வந்தார். அவரது பெயர் நினைவில் இல்லை.
(நினைவு வந்துவிட்டது. அவரது பெயர் சுவாமி ஷோகன் சந்தர் ஆகும் என்று பின்னர் எழுதியுள்ளார்கள்.)

அன்னார் (அலை) தொடர்ந்து எழுதியுள்ளார்கள்:

நான் ஒரு மாநாட்டை நடத்த விரும்புகின்றேன். ஒரு மார்க்க மாநாட்டை நடத்த விரும்புகின்றேன். (அந்த மாநாடு சர்வ சமய மாநாடு என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தது). தாங்களும் தங்களது மார்க்கத்தின் சிறப்புகள் பற்றி சில கருத்துகளை அந்த மாநாட்டில் வாசித்துக் காட்டப்படுவதற்காக எழுதுங்கள் என்று அவர் கூறினார். நான் (இயலாது என்று) எனது வருத்தத்தை தெரிவித்தேன். ஆனால், தாங்கள் கண்டிப்பாக எழுதுங்கள் என்று அவர் வலியுறுத்தினார். ஏனெனில் எனது சுய வலிமையால் எதனையும் என்னால் செய்ய முடியாது. இன்னும்கூறப்போனால், என்னிடம் எந்த ஆற்றலுமே கிடையாது என்பதை நான் அறிவேன். இறைவன் கூறாமல் என்னால் பேசமுடியாது. அவன் வெளிப்படுத்தாமல் எதனையும் என்னால் பார்க்க முடியாது. எனவே, அந்தக் கூட்டத்தின் அனைத்து சொற்பொழிவுகளை விடவும் மேலோங்கக் கூடிய கட்டுரையை நீ! எனது உள்ளத்தில் இறக்குவாயாக! என்று நான் இறை சன்னிதானத்தில் துஆ செய்தேன். ஓர் அற்றல் என்னுள் ஊதப்பட்டதை நான் துஆவிற்கு பிறகு கண்டேன். நான் விண்ணின் ஓர் அசைவை என்னுள் உணர்ந்தேன். நான் அந்தக் கட்டுரையின் எந்த மசோதாவையும் எழுதவில்லை. மாறாக, எழுதுகோல் கொண்டு மேலாட்டமாக எழுதினேன் என்பதை இந்த நேரத்தில் இங்கு இருக்கக்கூடிய எனது நண்பர்கள் அறிவர். மேலும் எவ்வளவு வேகவேகமாக எழுதினேன் என்றால் அதனை பார்த்து வேகமாக எழுதுவது எழுதக்கூடியவர்களுக்கு கடினமாகிவிட்டது. நான் கட்டுரையை எழுதி முடித்த பிறகு, கட்டுரை மேலோங்கிவிட்டது என்று இறைவன் புறமிருந்து இல்ஹாம் வந்தது. சுருக்கம் என்னவென்றால், அந்தக் கட்டுரை வாசித்துக் காட்டப்பட்டபோது அது வாசிக்கப்பட்ட நேரத்தில் பார்வையாளர்கள் ஓர் உத்வேகமான உலகத்தில் இருந்தனர். எல்லா புறமிருந்தும் பாராட்டு ஒலி வந்து கொண்டிருந்தது. எந்த அளவிற்கு என்றால், அந்தக் கூட்டத்தின் தலைவராக ஒரு இந்து சகோதரர் இருந்தார். அவர் அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். இந்தக் கட்டுரை மற்ற அனைத்து கட்டுரைகளை விடவும் மேலாங்கி விட்டது என்று அன்னாரின் வாயிலிருந்து தன்னிச்சையாக வெளிவந்துவிட்டது. இந்தக் கட்டுரை மேலோங்கிவிட்டது என்பதற்கு சாட்சியமாக லாஹூரிலிருந்து ஆங்கிலத்தில் வெளியாகக் கூடிய சிவில் அன்ட் மிலிட்டரி கெஸட் என்ற பத்திரிகையும் செய்தி வெளியிட்டது. அநேகமாக சுமார் 20-க்கும் மேற்பட்ட உருது பத்திரிகைகளும் இதே சாட்சியத்தை வழங்கியுள்ளன. அந்தக் கூட்டத்தில் இருந்த சில காழ்ப்புணர்ச்சி கொண்ட நபர்களை தவிர மற்ற அனைவரின் நாவிலும் இந்தக் கட்டுரையே வெற்றி வாகை சூடியது என்ற விஷயமே இருந்தது. இன்று வரை இதே சாட்சியத்தை வழங்கக் கூடிய நூற்றுக் கணக்கான நபர்கள் இருக்கின்றனர். இன்னும்கூறப்போனால், இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற அந்த நூலை படித்து இக்காலத்திலும் மக்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு வருகின்றனர்.

சுருக்கமாக, கட்டுரை மேலோங்கி இருக்கும் என்ற எனது முன்னறிவிப்பு ஒவ்வொரு பிரிவின் சாட்சியத்தாலும், ஆங்கில பத்திரிகையின் சாட்சியத்தாலும் நிறைவடைந்து விட்டது. மூஸா நபிக்கு மாய வித்தைகாரர்களுடன் செய்ய நேரிட்ட அந்த போட்டியைப் போன்றதாக இந்தப் போட்டி இருந்தது. ஏனெனில், அந்தக் கூட்டத்தில் பல்வேறு எண்ணங்களைக் கொண்ட நபர்கள் தத்தமது மார்க்கம் தொடர்பாக சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவர்களில் சில கிறித்தவர்கள் இருந்தனர். சில சனாதன மார்க்கத்தின் இந்துக்களும், சில ஆரிய சமாஜ சேர்ந்த இந்துக்களும், சில பிராமணர்களும், சில சீக்கியர்களும், மேலும் நமது சில எதிர்தரப்பு முஸ்லிம்களும் இருந்தனர். மேலும், அனைவரும் தத்தமது கைத் தடிகளின் கற்பனைப் பாம்பை உருவாக்கியிருந்தனர். ஆனால், அதேநேரம் எனது கரத்திலிருந்து இஸ்லாமிய கயிறு என்ற தடியை ஒரு தூய மற்றும் ஞானம் மிக்க சொற்பொழிவின் வடிவத்தில் அவர்களுக்கு எதிரில் நான் வெளியிட்டேன். எனவே அது பாம்பாக மாறி அனைவரையும் விழுங்கிவிட்டது. மேலும் எனது நாவிலிருந்து வெளிவந்த அந்த சொற்பொழிவு இன்று வரை சமுதாயத்தில் புகழ்ச்சியுடன் பேசப்படுகின்றது.

فَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذَالِكَ

(ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 291 -292, அடிக்குறிப்பு)

அடுத்து மற்றுமொரு முன்னறிவிப்பை குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இது இறை அடையாளம் ஆகும். இதைக் குறித்த குறிப்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் உள்ளது. அந்த அடையாளம் இதுவாகும்.

يَا اَحْمَدُ فَاضَتِ الرَّحْمَةُ عَلٰى شَفَتَيْكَ

அஹ்மதே! சொற்செறிவு மற்றும் பொருட்செறிவின் ஊற்றுகள் உமது நாவிலிருந்து பெருக்கெடுக்கும்படி செய்யப்பட்டுள்ளன.

ஆக, பல ஆண்டுகளாக இது உண்மைப்படுத்தப்பட்டு வருகின்றது. அரபி மொழியில் சொற்செறிவு மற்றும் பொருட் செறிவு நிறைந்த பல நூல்கள் எழுதப்பட்டு ஆயிரக்கணக்கான பணத்திற்கான பரிசுடன் இஸ்லாமிய ஆலிம்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டன. ஆனால், எவரும் (அவற்றிற்கெதிரில்) தலைதூக்கவில்லை. மேலும், போட்டியிட முன்வரவில்லை. இது இறை அடையாளமா? அல்லது மனிதனின் உளறல்களா? (ரிஸாலா அன்ஜாமே ஆத்தம், ரூஹானீ கஸாயின், தொகுதி 11, பக்கம் 290 -291)

மக்கள் நிறைய கூறுவர். இன்றும் கூறுகின்றனர். ஆனால் அந்த நேரத்தில் எவரும் போட்டியிட முன்வரவில்லை.

அடுத்து, துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் எனும் இறை அடையாளம். அதற்கு உதாரணமாக, துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் ஒரு சம்பவத்தை அன்னார் (அலை) எடுத்துரைக்கின்றார்கள்:

எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. நான் இந்த ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றேன்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இந்நாட்களில் வெளிப்பட்ட அடையளம் என்பது ஒரு துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் ஆகும். அது உண்மையில் மரணித்தவரை உயிர்ப்பிப்பதில் அடங்கும். அந்த சம்பவத்தின் விளக்கம்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 01 June 2023 Issue No. 22

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இவ்வாறாகும். ஹைதராபாத், தெற்கைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் அவர்களின் மகனான அப்துர் ரஹீம் என்ற சிறுவர் நம்முடைய மதரஸாவின் மாணவர் ஆவார். இறை நியதியின் கீழ் அவரை வெறிநாய் ஒன்று கடித்து விட்டது. நாம் அவரை சிகிச்சைக்காக கஸூலி எனும் ஊருக்கு அனுப்பினோம். சில நாட்கள் வரை அவருக்கு கஸூலியில் சிகிச்சை நடைபெற்று வந்தது. பின்னர் அவர் காதியான் திரும்பி வந்தார். சில நாட்கள் கழிந்த பிறகு அவரிடம் வெறி பிடித்தலின் அறிகுறிகள் வெளிப்பட்டன. அதாவது வெறி நாய் கடித்த பிறகு வெளிப்படக்கூடிய அந்த அறிகுறிகள் மீண்டும் அவரிடம் வெளிப்பட்டன. தண்ணீரைக் கண்டு அச்சப்படத் தொடங்கினார். மேலும் அபாயகரமான நிலை ஏற்பட்டுவிட்டது. அப்போது எளியவரான அந்த அயல்வாசிக்காக எனது உள்ளத்தில் கடுமையான துன்பம் ஏற்பட்டது. அந்த சிறுவர் அயல்வாசி ஆவார். பாவம் ஏழையான அந்த சிறுவர் தனது நாட்டிலிருந்து தொலைவில் இருக்கின்றார். எனவே எனது உள்ளம் மிகவும் நிம்மதி இழந்தது. மேலும், துஆவிற்காக ஒரு சிறப்பான கவனம் உருவாகிவிட்டது. அந்த ஏழை சில மணிநேரத்திற்கு பிறகு இறந்துபோய் விடுவார் என்று ஒவ்வொரு நபரும் கருதி இருந்தார். பாவம் அவரை போர்டிங்கிலிருந்து வெளியேற்றி மற்றவர்களிலிருந்து விலக்கி அனைத்து தற்காப்பு ஏற்பாடுகளுடன் ஒரு தனி வீட்டில் வைக்கப்பட்டார். மேலும், கஸூலி என்ற ஊரிலிருந்த ஆங்கில மருத்துவர்களுக்கு தந்தி அனுப்பப்பட்டது. மேலும், இந்த நிலையில் அவருக்கு சிகிச்சை ஏதும் உள்ளதா? என்று கேட்கப்பட்டது. இனி அவருக்கு எந்த சிகிச்சையும் இல்லை என்று அந்தப் பக்கத்திலிருந்து தந்தி மூலமாக பதில் வந்தது. ஆனால், அந்த ஏழை மற்றும் அயல்வாசி சிறுவருக்காக எனது உள்ளத்தில் மிகவும் அதிக கவனம் உருவாகிவிட்டது. மேலும், எனது நண்பர்களும் அவருக்காக துஆ செய்யும்படி மிகவும் வலியுறுத்தினர். ஏனெனில், அந்த கஷ்டத்தின் நிலையில் அந்த சிறுவன் மிகவும் கருணைக்குரியவனாக இருந்தான். மேலும், ஒருவேளை அவர் மரணித்துவிட்டால் பின்னர் ஒரு தீய வடிவில் அவரது மரணம் எதிரிகளின் எள்ளி நகையாடுதலுக்கு காரணியாக அமைந்துவிடும் என்ற அச்சம் எனது உள்ளத்தில் உருவானது.

இவர் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான பெரும் பெரும் வாதம் செய்தாரே! (ஆனால் இப்போது என்னவாயிற்று?) என்று எதிரிகள் கூச்சிலிடுவார்கள்.

அப்போது எனது உள்ளம் அவருக்காக கடுமையான வேதனை, நிம்மதியின்மைக்கு ஆளானது. மேலும், நமது விருப்பத்தால் உருவாகாத அசாதாரண கவனம் (எனது உள்ளத்தில்) உருவாகிவிட்டது. இன்னும் கூறப்போனால், (அதுபோன்ற அசாதாரண கவனம்) இறைவன் புறமிருந்து மட்டுமே உருவாகின்றது.

(அதுபோன்ற நிலை துஆவின் தன்மையில்) உருவாகிவிட்டால் பின்னர் இறைவனின் கட்டளையினால் அது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது, அதனால் மரணித்தவர் உயிர் பெற்றுவிடுவது சாத்தியம் ஆகும். அதற்கு இந்த அளவிற்கு தாக்கம் இருக்கின்றது.

சுருக்கமாக, அந்த சிறுவருக்காக அல்லாஹ்வின் புறமிருந்து வெற்றியின் நிலை உருவாகி விட்டது. அது உச்சத்தை அடைந்து விட்டது. மேலும் வேதனையானது தனது முழு ஆதிக்கத்தையும் எனது உள்ளத்தின் மீது செலுத்தியது. அதுபோன்ற தன்மை துஆவில் ஏற்பட்டு விட்டது. உள்ளம் வேதனையால் நிறைந்துவிட்டது. அப்போது உண்மையில் மரணித்தவராக இருந்த அந்த நோயாளியின் மீது அந்த கவனத்தின் தாக்கங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன. முதலில் அவர் தண்ணீரைக் கண்டு பயந்து கொண்டிருந்தார். மேலும், வெளிச்சத்தைக் கண்டு (விலகி) ஓடிவந்தார். ஆனால், தீடிரென அந்த சிறுவரின் உடல் நலம் ஆரோக்கியமடையத் தொடங்கியது. தற்போது தனக்கு தண்ணீரைக் கண்டு பயம் ஏற்படவில்லை என்று அவர் கூறினார். அப்போது அவருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டபோது அவர் எந்த அச்சமுமின்றி குடித்து விட்டார். இன்னும்கூறப்போனால், தண்ணீரால் உளு செய்துவிட்டு தொழுதும் விட்டார். மேலும் இரவு முழுவதும் தூங்கிக் கொண்டிருந்தார். மேலும், அபாயகரமான மற்றும் மிருகத்தனமான நிலை நீங்கிவிட்டது. எந்த அளவிற்கு என்றால், சில நாட்களுக்குள் முற்றிலும் குணமடைந்துவிட்டார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அவரிடத்தில் உருவாகியிருந்த அந்த வெறித் தனமான நிலைமை அவரை அழித்து விட வேண்டும் என்பதற்காக உருவாகியிருக்கவில்லை. மாறாக, இறைவனின் அடையாளம் வெளிப்பட வேண்டும் என்பதற்காக உருவாகியிருந்தது என்று எனது உள்ளத்தில் உடனடியாக போடப்பட்டது. ஒருவரை வெறி நாய் கடித்து, மேலும் வெறித் தனத்தின் அடையாளங்களும் வெளிப்பட்டு விட்ட பிறகு, பின்னர் அந்நிலையிலிருந்து அவர் உயிர் பிழைக்க முடியும் என்பதை உலகத்தில் ஒருபோதும் கண்டதில்லை என்று அனுபவம் வாய்ந்த மக்கள் கூறுகின்றனர். இந்த விஷயத்திற்கு இதை விட வேறு சான்று என்ன இருக்க முடியும்? அதாவது, இனி எந்த சிகிச்சையும் செய்ய இயலாது என்று கஸூலி ஊரில் அரசாங்கம் சார்பாக வெறிநாய் கடி சிகிச்சை அளிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவர்களே நமது தந்திக்கு வழங்கிய பதிலில் தெளிவாக எழுதிவிட்டனர். (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின், தொகுதி 22, பக்கம் 480 - 481)

அடுத்து, டூயி குறித்த அடையாளத்தை குறிப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அந்த மருத்துவர் டூயி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பார்வையில் அரசர்களைப் போன்று மேன்மை மற்றும் கண்ணியம் பெற்றிருந்தார். அவரை இறைவன் எனது முபாஹலா மற்றும் துஆவினால் அழித்துவிட்டான். மேலும் ஓர் உலகை என் பக்கம் குனியச் செய்துவிட்டான். இந்த சம்பவம் உலகின் அனைத்து புகழ் பெற்ற பத்திரிகைகளிலும் பிரபல்யம் அடைந்து ஓர் உலகளாவிய பிரபல்யத்தின் வடிவத்தில் பொதுமக்கள் மற்றும் மேல்தட்டு மக்கள் என அனைவராலும் பேசப்பட்டது. (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின், தொகுதி 22, பக்கம் 553)

அடுத்து மற்றோர் அடையாளத்தைக் குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மவ்லவி குலாம் ஹூஸைன் தஸ்தகீர் குஸூரீ என்பவர் சுயமாகவே என்னுடன் முபாஹலா செய்து கொண்டார். மேலும், எவர் பொய்யரோ அவரை இறைவன் அழிக்கட்டும் என்று தனது நூலில் துஆ செய்தார். ஒருதரப்பு முபாஹலாவாக அது இருந்தது. பின்னர் அந்த துஆவினால் சில நாட்களுக்குப் பிறகு அவர் சுயமே அழிந்து போய் விட்டார்.

அதாவது அந்த மவ்லவி மாண்டுபோனார்.

எதிரிகளாக இருக்கும் அந்த மவ்லவிமார்கள் புரிந்து கொண்டால் அவர்களுக்கு இது எந்த அளவிற்கு (மகத்தான) அடையாளம் ஆகும்! (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின், தொகுதி 22, பக்கம் 239)

அடுத்து, அல்லாஹ்வின் ஆதரவு எவ்வாறு தம்முடன் இருக்கின்றது? என்பதைக் குறித்த மற்றோர் அடையாளத்தை அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீதியுடைய ஒவ்வொரு நபரும் மவ்வலி குலாம் ஹூஸைன் தஸ்தகீர் குஸூரீயின் நூலைப் பார்த்து அவர் எவ்வாறு சுயமாக முபாஹலா செய்து கொண்டார்? என்பதை புரிந்து கொள்ள முடியும். ஃபைஸே ரஹ்மானி என்ற தனது நூலில் அதனை அவர் வெளியிட்டிருந்தார்.

**இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...**

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad